සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

# மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 08 - 2023 (2024)
# Third Term Test - Grade 08 - 2023 (2024)

## இஸ்லாம்

நேரம்: 2 மணி.

சுட்டெண்:

## பகுதி I

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. இஸ்லாமிய மாதங்களில் ரமழான் எத்தனையாவது மாதமாகக் காணப்படுகின்றது?
   i. எட்டு    ii. ஒன்பது    iii. பத்து    iv. பன்னிரெண்டு
2. பாவங்களில் இருந்து எம்மை தூய்மைப்படுத்தும் மாதமே உன் வருகை நல் வரவாகட்டும் என்ற கூற்று,
   i. நபி (ஸல்) கூற்று    ii. அபூபக்கர் (ரழி) கூற்று
   iii. உமர் (ரழி) கூற்று    iv. உஸ்மான் (ரழி) கூற்று
3. ஸகாத் என்ற பதத்தின் மொழிக் கருத்து.
   i. தூய்மை    ii. வரி    iii. செல்வம்    iv. பணம்
4. யதீம் என்ற சொல் குறிப்பது.
   i. அநாதை    2. பணக்காரன்    iii. ஆசிரியர்    iv. அறிஞன்
5. அல்லாஹ்வால் அருளப்பட்ட இறுதி வேதம்
   i. தௌராத்    ii. சபூர்    iii. இன்ஜீல்    iv. புர்கான்

(2 x 5 = 10 புள்ளிகள்)

**02. மிகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**
**(ஹிப்ரு, அபுல்பஸர், முஃஜிஸா, துஆ, அல் அமீன், இஃலாஸ்)**

1. மூஸா (அலை) அவர்களுக்கு தௌராத் வேதம் ____________________ மொழியில் அருளப்பட்டது.
2. அரபு மொழியில் அற்புதத்தை ____________________ எனக் குறிப்பிடுவர்.
3. ஆதம் (அலை) அவர்கள் ____________________ என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார்கள்.
4. வணக்கங்களில் தலையாயது ____________________ என நபி(ஸல்) குறிப்பிட்டார்கள்.
5. குறைஷிக் காபிர்கள் நபி (ஸல்) அவர்களை ____________________ என்ற பெயர் கொண்டு அழைத்தார்கள்.

(2 x 5 = 10 புள்ளிகள்)

**03. சரியாயின் சரி (✓) எனவும் பிழையாயின் பிழை (×) எனவும் குறிப்பிடுக.**

1. சூரதுல் மாஊன் அல் குர்ஆனில் 107 வது அத்தியாயம் ஆகும். (   )
2. அஜ்னபி என்போர் திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டவர் ஆவார். (   )
3. அலி (ரழி) அவர்கள் ஹஸன் (ரழி) யின் மகனாவார். (   )
4. இபாதா என்பது தொழுகையை மாத்திரம் குறிக்கும். (   )
5. தொழுகையில் ஒரு விடயத்தை மறந்தால் ஸஜதா ஸஹ்வு செய்ய வேண்டும். (   )

(2 x 5 = 10 புள்ளிகள்)

4. **A** பகுதிக்கு பொருத்தமானதை **B** பகுதியில் இருந்து தெரிந்து இணைக்குக.

| A | B |
| --- | --- |
| 1. அல் குர்ஆன் | இமாரத் |
| 2. பர்ளு கிபாயா | மனைவியின் சகோதரி |
| 3. உலுல் அஸ்ம் | ஆலிமை உருவாக்குதல் |
| 4. நிரந்தர மஹ்ரமி | வஹி மத்லூவ் |
| 5. பூமியை வளப்படுத்தல் | திட உறுதிபூண்டவர்கள் |
| | பாட்டி |

(5 x 2 = 10 புள்ளிகள்)

## பகுதி II

- **பகுதி இரண்டில் முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றில் 4 வினாக்களுமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

எல்லா வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1. நபி இப்றாஹீம்(அலை) அவர்களின் இரண்டு மனைவிமார்களின் பெயர்களைத் தருக?
2. ஆத், ஸமூத் ஆகிய சமூகங்கள் அழிக்கப்பட்டதற்கான காரணம் யாது?
3. வலீமா எச்சந்தர்ப்பத்தில் வழங்கப்படும்?
4. பெரும் பாவங்கள் இரண்டை குறிப்பிடுக?
5. அல் அமீன், அஸ்ஸாதிக் என்பதன் கருத்துக்களை தருக?
6. ஹதீஸின் வகைகள் இரண்டை குறிப்பிடுக?
7. வஹியின் பிரிவுகள் இரண்டை தருக?
8. சஜதா திலாவத் செய்யப்படும் சந்தர்ப்பத்தை குறிப்பிடுக?
9. ஆமுல் ஹுஸ்ன் ஆண்டோடு தொடர்புபடும் இரண்டு நபர்களைக் குறிப்பிடுக?
10. சுனன் அர்பஆ கிரந்தங்களில் இரண்டை தருக?

(2 x 10 = 20 புள்ளிகள்)

02. 1. தொழுகையின் பயன்கள் மூன்று தருக?
2. ஸகாத், சதகா ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் மூன்று எழுதுக?
3. பிரார்த்திக்கும் போது கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகள் நான்கு தருக?

(3+ 3+4 = 10 புள்ளிகள்)

03. 1. பால்குடி உறவின் மூலம் உருவான மஹ்ரமிகள் மூவரைக்குறிப்பிடுக?
2. ஒரு முஸ்லிம் தவிர்ந்து கொள்ள வேண்டிய துர்க்குணங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
3. ஒரு மாணவன் கடைபிடிக்க வேண்டிய நற்குணங்கள் நான்கு தருக?

(3+ 3+4 = 10 புள்ளிகள்)

04. 1. ஹலால், ஹராம் என்றால் என்ன?
2. நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்கள் மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக?
3. மவ்ழூஆன ஹதீஸ்கள் தோற்றம் பெற்றதற்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக?

(3+ 3+4 = 10 புள்ளிகள்)

05. 1. உள்ளம் மென்மையடையவும், இலட்சியம் நிறைவேறவும் யாருடன் இரக்கமாக நடந்து கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்?

2. அல்லாஹ்வும் நபி (ஸல்) அவர்களும் தடுத்த பெரும் பாவங்கள் மூன்றை குறிப்பிடுக?

3. சமூகப்பணிகள் நான்கினைக் குறிப்பிடுக?

(3+ 3+4 = 10 புள்ளிகள்)

06. 1. இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட பயணங்கள் மூன்று தருக?

2. பயணத்தின் பொழுது கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகள் மூன்றை தருக?

3. பயணத்தோடு தொடர்பான துஆ ஒன்றினைக் குறிப்பிடுக?

(3+ 3+4 = 10 புள்ளிகள்)

07. 1. உம்மஹாதுல் மு.ஃ.மினீன் என்போர் யார்?

2. பொதுச் சொத்துக்கள் மூன்றை தருக?

3. உங்களுக்குத் தெரிந்த நான்கு சகாபாக்களின் பெயர்களை குறிப்பிடுக?

(3+ 3+4 = 10 புள்ளிகள்)

(4) WWW.PastPapers.WiKi (3)
Download Term Test Papers, Short Notes From One Place!

PAST PAPERS WIKI
(4) WWW.PastPapers.WiKi (4)

Download Term Test Papers, Short Notes From One Place!

සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 08 - 2023 (2024)
Third Term Test - Grade 08 - 2023 (2024)

# இஸ்லாம்

விடைப்பத்திரம்

## பகுதி I

01)
1. ii
2. ii
3. ii
4. i
5. iv

02)
1. ஹிப்ரு
2. மு.ஃஜிஸாத்
3. அபுல்பஸர்
4. துஆ
5. அல் அமீன்

03)
1. சரி (✓)
2. சரி (✓)
3. பிழை (×)
4. பிழை (×)
5. சரி (✓)

04)
1. வஹீ மத்லூ
2. ஆலிமை உருவாக்குதல்
3. திட உறுதி பூண்டவரகள்
4. பாட்டி
5. இமாரத

## பகுதி II

01.
1. ஹாஜர், சாரா
2. பெரும் பாவங்களை தொடர்ந்து செய்தல்
3. மணமகன்
4. சூனியம் செய்தல், கொலை, வட்டியை உண்ணுதல், அவதூறு
5. நம்பிக்கையாளர், உண்மையாளர்
6. ஹதீஸ் குத்ஸி. ஹதீஸ் நபவி
7. வஹீ மத்லூ, வஹீகைறு மத்லூ
8. குர்ஆன் ஓதும் பொழுது, ஸஜ்தா உடைய ஆயத்தை ஓதும் பொழுது
9. அபூதாலிப் - கதீஜா
10. திர்மிதி, இப்னுமாஜா, நஸாஈ, அபுதாவூத்

02.
1. பாவம் நீக்கப்படுகிறது, சுவனம் கிடைக்கும், பிரகாசம், ஆரோக்கியம்.
2. ஸக்காத் குறிபிப்ட்ட பொருட்கள் மீது கடமை, சதகா எப்பொருள் மீதும் கொடுக்கலாம்.
   சகாத் சிலர் மீது மாத்திரம் கடமை, சதகா விரும்பியவர் கொடுக்கலாம்.
   சகாத் 8 கூட்டத்தாருக்கு மட்டும், சதகா யாருக்கும் கொடுக்கலாம்.
3.
   1. உளுவுடன் பிரார்த்தித்தல்
   2. கிப்லாவை முன்னோக்குதல்
   3. ஹம்து சலாவாத்துடன் பிரார்த்தித்தல்
   4. பணிவு உள்ளசச் த்துடன் பிரார்த்தித்தல்

03.
1. பால் கொடுத்த தாய், பால்குடி உறவு மகள், மகனின் புதல்வி. பால்குடி உறவு தாயின் சகோதரி.
2. 1. பொய் 2. பெருமை அடித்தல் 3. பொறாமை 4. கோள் சொல்லுதல்
3. இறைபக்தி, உண்மை பேசுதல், வாக்கை நிறைவேறற் ல், பணிவுடன் நடத்தல்

04.
1. இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டவை ஹலால், தடுக்கப்பட்டவை ஹராம்
2. கதஜீ ா, சவீதா, சபிய்யா
3. 1. அல்லாஹ்வின் அன்பை பெறுதல் 2. அரசியல் சிந்தனை பிரிவுக்கு வலுச் சேர்த்தல்
4. ஆட்சியாளர்களிடம் நற்பேறு பெற்றுக் கொள்ளல் 4. பிரபலம் தேடுதல

(2) WWW.PastPapers.WiKi (1)
Download Term Test Papers, Short Notes From One Place!

05. 1. அனாதைகளுடன்

2. இணைவைத்தல், சூனியம் செய்தல். கொலை செய்தல், வட்டி உண்ணல்

3. பள்ளிவாசல் கட்டுதல், பாடசாலை அமைத்தல், நூலகம் நிறுவுதல், மருத்துவமனை கடடு தல், சன சமூக நிலையங்களை உருவாக்குதல்

06. 1. உழைப்பிறக் ாக, கல்வி தேடல், நண்பர்கள், உறவினரக் ளை தரிசித்தல், நன்மையை ஏவி தீமையை தடுத்தல், ஹஜ் உம்ரா போன்றன

2. 1. தூய எண்ணம்
   2. அல்லாஹ்விடம் உதவி தேடல்
   3. ஆலோசனை பெறல்.
   4. கடனை செலுத்துதல்
   5. தொழுகை நேரங்களை கவனத்தில் கொள்ளல்
   6. அஜ்னபி மஹ்ரமி வரையறை பேணல்

3. 1. சுபுஹானல்லதி சஹ்ஹரலனா ஹாதா....
   2. ஆயிபூன தாயிபூன ஆபிதூன லிரப்பினா ஹாமிதூன.

07 1. நபி ஸல் அவர்களின் மனைவிமார்கள்

2. பாடசாலை, மருத்துவமனைகள், நூலகங்கள், பள்ளிவாசல்கள்

3. அபூபக்கர்(ரழி), அலி(ரழி), அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்(ரழி), அப்துல்லாஹ் இப்னு உமர்(ரழி)

PAST PAPERS WIKI

(2) WWW.PastPapers.WiKi (2)



Download Term Test Papers, Short Notes From One Place!

# LOL.lk
## BookStore

# විභාග ඉලක්ක
# පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න





| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book | ගුරු අත්පොත්

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**